# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය

අති විශෙෂ

# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

அதி விசேஷமானது

අංක 1789/10 - 2012 දෙසැම්බර් මස 17 වැනි සඳුදා - 2012.12.17

*1789/10 ஆம் இலக்கம் - 2012 ஆம் ஆண்டு திசெம்பர் மாதம் 17 ஆந் திகதி திங்கட்கிழமை*

*(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)*


# பகுதி I : தொகுதி (I) - பொது

## *அரசாங்க அறிவித்தல்கள்*

**சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம்**

*இறப்பர் பயிர்ச் செய்கையும், பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலுக்குமான சம்பளச்சபை*

**7 ஆம் பிரிவின் கீழ் அறிவித்தல்**

*தொழில், தொழில் உறவுகள் அமைச்சர் காமினி லொக்குகே ஆகிய நான் (136 ஆம் அத்தியாயமாகிய) சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டத்தின் 6 (1) ஆம் பிரிவின் கீழ் , இறப்பர் பயிர்ச் செய்கையும் பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலுக்கான கட்டளையை ஆக்க உத்தேசித்துள்ளேன் என்பதனை அக்கட்டளைச் சட்டத்தின் 7 (1) ஆம் பிரிவின் கீழ் அறிவிக்கிறேன்.*

*மேலுள்ள உத்தேச தீர்மானத்திற்கு எதிரான ஆட்சேபனைகள் 2013 ஆம் ஆண்டு சனவரி மாதம் 09 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிவரை என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். அத்தகைய ஆட்சேபனைகள் ஒவ்வொன்றும் எழுத்தில் செய்யப்படுதல் வேண்டும் என்பதுடன் அத்தகைய ஆட்சேபனை எந்த ஏதுக்கள் மீது செய்யப்படுகின்றதோ அந்த ஏதுக்கள் பற்றிய கூற்றொன்றினைக் கொண்டிருத்தலும் வேண்டும்.*

*காமினி லொக்குகே,*
*தொழில், தொழில் உறவுகள் அமைச்சர்.*

*தொழில் திணைக்களம்,*
*கொழும்பு 05,*
*2012, நவெம்பர் 20.*

**கட்டளை**

*சம்பளச் சபைகள் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 136) இன் பகுதி II இன் ஏற்பாடுகள் பின்வரும் தொழிலுக்கு ஏற்புடையதாகும்.*

*இறப்பர் பயிர்ச்செய்கையும் பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலும்.*

*(1) 10 ஏக்கர் அல்லது அதற்கு மேற்பட்ட இறப்பர் தோட்டத்தைப் பயிர் செய்தலும் பராமரித்தலும்.*

*(2) இயற்கையான இறப்பர் பாலிலிருந்து சந்தைப்படுத்தக்கூடிய பச்சை இறப்பரைத் தயாரித்தல்.*
*(இது துணைத் துலகை பட்டி இறப்பர், துழுவல் இறப்பர் மைப்படுத்தப்பட்ட பால் மற்றும் T SR உள்ளடங்கலாக)*

*கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள தொழிலின் வேலையாட்களின் சேவையையும் உள்ளடக்கியதாகும்.*

***அட்டவணை***

***இறப்பர் பயிர்ச் செய்கையிலும் பராமரித்தலிலும் ஈடுபட்டுள்ள வேலையாட்கள்*:**

* *பல்தரப்பட்ட வேலையாட்கள்*

* *அறுவடைத் தொழிலர்*

***அறுவடைத் தொழிலர்* :**

*மரத்தைச் சீவுதல், இறப்பர் பால், துருவல்களைச் சேகரித்தல், இறப்பர் பால், துருவல்கள் என்பவற்றை கொண்டு செல்லல், நிறுப்பதற்கு உதவுதல், வெட்டப்பட்ட பகுதியைப் பேணுதல், மழை நீருக்கான காவல்களை அமைத்தல் இரசாயனப் பொருட்களை இடல்.*

***பலதரப்பட்ட வேலையாட்கள்* :**

*அங்குரநுனி வெட்டுதல் உட்பட நாற்று மேடையை அமைத்தல் நடவடிக்கைகள், காணியைத் துப்பரவு செய்தல், பாலங்களையும் மற்றும் பாதைகளையும், அமைத்தல், வேலிகளை அமைத்தலும் எல்லைகளை அமைத்தலும், மண் பாதுகாப்பு வேலை, கான்களை அமைத்தல் மற்றும் திருத்துதலும், மரங்களை நாட்டும் வேலை, களைகளை பிடுங்குதல் (மனிதரால் இரசாயனமுறை இயற்கை பசளையிடல்), மரங்களின் தொகை கணிப்பிடல், நோய் அகற்றிகள் மற்றும் பூச்சி கொல்லிகளையும் பயன்படுத்தல், மரங்களைப் பராமரித்தல், மரங்களின் தொகைக் கணிப்பிடலும், மற்றும் அடையாளமிடுதலும், மழை நீருக்கான காவல்களை, இடல் வெட்டப்பட்ட பகுதியை பேணுதல், பொதுத் துப்பரவு செய்தல், காவலாளிகள், கங்காணிமார்.*

***2.1 சந்தைப்படுத்தக்கூடிய பச்சை இறப்பரின் உற்பத்தியில் ஈடுபடும் வேலையாட்கள்*:**

*இறப்பர் பாலை வேறு தொட்டிகளுக்கு மாற்றுதல், பாலைக் கடைந்து தேவையற்ற ஆடைகளை பிரித்தெடுத்தல், பால் கட்டித் தட்டுக்களை பதனிடுதல், பால் மற்றும் பச்சை இறப்பர் பதனிடும் இயந்திரங்களை பேணுதலும், பயன்படுத்தலும், ஈரத்தன்மையான மற்றும் உலர்ந்தபட்டிகளையும் தட்டுகளையும் கையாளுதல், சகலவகையான பச்சை இறப்பரைதரம்பிரித்தலும், தரப்படுத்தல் மற்றும் பொதி செய்தலும், இறப்பர் பால் சேகரிக்கும் அனைத்து பாத்திரங்கள், தொட்டிகள், தொழிற்சாலை வளவுகள் மற்றும் ஏற்றிச் செல்லும் வாகனங்கள் என்பவற்றை துப்பரவு செய்தல், புகை வீடுகள் கொதிகலன்கள் மற்றும் காய்ச்சல் கோபுரங்களையும் பேணுதல், விறகுகளைப் பதனிடுதல், இறப்பர் தோட்டங்கள் மற்றும் தொழிற்சாலைகளிலும் அமைக்கப்பட்டுள்ள கழிவுநீர் பதனிடும் இயந்திரங்களை இயக்குதலும் பேணுதலும், பாலை மையப்படுத்தி உற்பத்தி செய்தலின் இறப்பர் தர வரையறைகளை ஆய்வு செய்தல்.*

*மேலுள்ள அட்டவணையில் குறிப்பிடப்படாத ஆனால் இறப்பர் பயிர்ச்செய்கை மற்றும் பச்சை இறப்பர் பதனிடும் கைத்தொழிலில் ஈடுபடுபவர்கள் மற்றும் இதனுடன் தொடர்புடைய வேலையில் ஈடுபடுபவர்களும் இத்தொழிலின் கீழ் உள்ளடக்கப்படுவர்.*

*ஆனால் கீழுள்ள வேலையாட்கள் உள்ளடக்கப்படமாட்டார்கள்.*

*இறப்பர் செய்வோர், இயந்திர ஓட்டுநர், லொறி மற்றும் வான் ஓட்டுநர், எழுதுவினைஞர், நடத்துநர் கணக்குப்பிள்ளை, களஞ்சியக் காப்பாளர், மருந்தாளர், மருத்துவிச்சி, பங்களா வேலையாளர், வண்ணான், முடிதிருத்துநர்.*

*1- 14*

*இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.*